**செப்டம்பர் – 24**

# TNPSC துளிகள்

- 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், இந்திய இராணுவத்தின் முதலாவது கவசப் படைப் பிரிவானது, நடவடிக்கை சூழல்களின் கீழ் நீர் சார்ந்த தடைகளைக் கடக்கும் திறன்களைச் சரி பார்ப்பதற்காக, பஞ்சாபின் பாட்டியாலாவில் ஜல் சக்தி பயிற்சியை நடத்தியது.
- ஏரிகள், ஆறுகள் மற்றும் பெருங்கடல்களைப் பாதுகாப்பதில் தொடர்ச்சியான நீர் தரக் கண்காணிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்காக செப்டம்பர் 18 ஆம் தேதியன்று உலக நீர் கண்காணிப்பு தினம் அனுசரிக்கப்பட்டது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## தமிழ்நாட்டில் பதிவு நீக்கப்பட்ட அரசியல் கட்சிகள்




- இந்தியத் தேர்தல் ஆணையமானது, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதியன்று தமிழ்நாட்டினைச் சேர்ந்த 42 அரசியல் கட்சிகளைப் பட்டியலில் இருந்து நீக்கியது.
- 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை மேற் கொள்ளப் பட்டது.
- தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் தேர்தலில் போட்டியிடாத கட்சிகளைப் பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் பட்டியலிலிருந்து நீக்கலாம்.
- பாதிக்கப்பட்ட கட்சிகள், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் (RUPPs) ஆகும்.
- இது தேர்தல் ஆணையத்தின், தேர்தல் முறையின் இரண்டாம் கட்ட சீர்மையாக்கத்தின் ஒரு பகுதியாகும்.

- தமிமுன் அன்சாரி தலைமையிலான மனிதநேய மக்கள் கட்சியும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.
- தமிமுன் அன்சாரி அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (AIADMK) சார்பில் நாகப்பட்டினம் தொகுதியில் வெற்றி பெற்றார்.
- N. R. தனபாலன் தலைமையிலான பெருந்தலைவர் மக்கள் கட்சிப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.
- 2016 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பெரம்பூரில் இருந்து அதிமுக சார்பில் போட்டியிட்ட N. R. தனபாலன் தோல்வியடைந்தார்.
- ஒரு கட்சியானது பதிவு செய்யப்பட்ட ஐந்து ஆண்டுகளுக்குள் தேர்தலில் போட்டியிடுவதாக அதன் சாசனத்தில் அறிவிக்க வேண்டும்.

## மின் விநியோக நிறுவனங்களின் ஒழுங்குமுறைக்கு உட்பட்ட சொத்துக்கள்




- தமிழ்நாடு, உத்தரப் பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகியவை இந்தியாவின் 3 லட்சம் கோடி மின்சார விநியோக நிறுவனங்களின் (DISCOMS) ஒழுங்குமுறைக்கு உட்பட்ட சொத்துக்களில் (RA) பெரும் பங்கைக் கொண்டுள்ளன.
- DISCOMS நிறுவனங்களால் ஏற்படும் செலவினங்கள் ஆனது சரியான நேரத்தில் கட்டணத் திருத்தங்கள் மூலம் மீட்கப்படா விட்டால் ஒழுங்குமுறைக்கு உட்பட்ட சொத்துக்கள் (RA) உருவாகின்றன.
- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதி நிலவரப்படி, தமிழ்நாட்டின் DISCOMS நிறுவனங்கள் 83,000 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒழுங்குமுறைக்கு உட்பட்ட சொத்துக்களைக் கொண்டிருந்தன.
- சொத்து மற்றும் பொறுப்பு பரவலுக்காக தமிழ்நாடு அரசு தமிழ்நாடு உற்பத்தி மற்றும் விநியோகக் கழக லிமிடெட் (TANGEDCO) நிறுவனத்தினை பின்வருமாறு மறுசீரமைத்து உள்ளது.
  - தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக லிமிடெட் (TNPGCL) – 27%,
  - தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக லிமிடெட் (TNGECL) – 2%, மற்றும்
  - தமிழ்நாடு மின் விநியோக கழக லிமிடெட் (TNPDCL) – 71%,

- 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி நிலவரப்படி ஒழுங்குமுறைக்கு உட்பட்ட சொத்துக்கள் TNPGCL நிறுவனத்திற்கு 22,110.16 கோடி ரூபாயாகவும், TNGECL நிறுவனத்திற்கு 1,851.71 கோடி ரூபாயாகவும் மற்றும் TNPDCL நிறுவனத்திற்கு 59,038.14 கோடி ரூபாயாகவும் முன்மொழியப்பட்டன.
- உச்ச நீதிமன்றம் நான்கு ஆண்டுகளில் கடந்த கால ஒழுங்குமுறைக்கு உட்பட்டச் சொத்துக்களைத் தீர்க்க உத்தரவிட்டுள்ளதோடு மேலும் புதிய ஒழுங்குமுறைக்கு உட்பட்ட சொத்து உருவாக்கத்தை வருடாந்திர வருவாய் தேவையில் (ARR) 3% ஆகக் வரம்பு நிர்ணயித்துள்ளது என்ற ஒரு நிலைமையில் மேலும் மின்சாரத்திற்கான மேல் முறையீட்டுத் தீர்ப்பாயம் (APTEL) அதற்கான இணக்கத்தை மேற்பார்வையிடுகிறது.
- தமிழ்நாட்டின் மொத்தத் தொழில்நுட்ப மற்றும் வணிக (AT&C) இழப்புகள் 2017–18 ஆம் ஆண்டில் 18.73 சதவீதத்திலிருந்து 2024–25 ஆம் ஆண்டில் 10.73% ஆகக் குறைக்கப் பட்டு உள்ளன.
- விநியோகத்திற்கான சராசரி செலவினம் - சராசரி வருவாய் (ACS–ARR) இடைவெளி ஒரு அலகுக்கு 0.04 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் புதிய துறைமுகத் திட்டங்கள்




- குஜராத்தின் பாவ்நகரில் இருந்தபடி, சென்னை துறைமுகம் மற்றும் காமராஜர் துறைமுகத்தில் மூன்று உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டினார்.
- சென்னை துறைமுகத்தில், கடலோரப் பகுதிக்கு பின்னால் உள்ள 850 மீட்டர் நீளமுள்ள தடுப்புச் சுவர் 33 கோடி ரூபாய் செலவில் சரி செய்யப் பட்டு பலப்படுத்தப் படும்.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் (IIT-M) நடத்திய ஆய்வின் அடிப்படையில், இந்தத் திட்டமானது நீண்டகால துறைமுக உறுதித் தன்மையை உறுதி செய்வதையும், செயல்பாட்டு இடையூறுகளைக் குறைப்பதையும் நோக்கமாகக்

கொண்டுள்ளது.

- காமராஜர் துறைமுகத்தில், கார் மற்றும் கொள்கலன் உள்ள பகுதிகள் உட்பட எட்டு இடங்களில் 25 கோடி ரூபாய் செலவில் தீயணைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.
- காமராஜர் துறைமுகத்தில் உள்ள மற்றொரு திட்டத்தில் தேசியக் கடற்கரை போக்குவரத்துச் செயலாக்க அமைப்பு (NCTPS) சாலையிலிருந்து நிலக்கரி சேமிப்புக் கிடங்கிற்கு கற்காரை/கான்கிரீட் சாலை அமைப்பதும் இரண்டு பாலங்களை மீண்டும் கட்டமைப்பதும் அடங்கும்.
- 58 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ள சாலை மற்றும் பால கட்டமைப்புத் திட்டம், கனரக வாகனப் பாதுகாப்பு மற்றும் நிலக்கரி கையாளும் திறனை மேம்படுத்தும் என்ற நிலையில் இது 2027 ஆம் ஆண்டிற்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

## தூத்துக்குடியில் வணிகக் கப்பல் கட்டும் தளங்கள்





- தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரை எந்தவித மேம்பாட்டு பணிகளும் மேற்கொள்ளப் படாத இரண்டு இடத்தில் (பசுமைக் கள) வணிகக் கப்பல் கட்டும் தளங்களை நிறுவ தமிழ்நாடு 30,000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்த்துள்ளது.
- இந்தத் திட்டங்கள் ஆனது நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உட்பட 55,000 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- தமிழ்நாடு மாநிலத் தொழில் துறை மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) மற்றும் V.O. சிதம்பரனார் துறைமுக ஆணையம் இடையே இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானதைத் தொடர்ந்து இந்த முதலீடு மேற்கொள்ளப் படுகிறது.
- கொச்சின் கப்பல் கட்டும் தளம் லிமிடெட் நிறுவனமானது, முதல் கட்டத்தில் 10,000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை (4,000 நேரடி மற்றும் 6,000 மறைமுக) உருவாக்கும் ஒரு கப்பல் கட்டும் தளத்தை அமைக்க 15,000 கோடி ரூபாய் முதலீடு செய்யும்.

- மேசகன் டாக் ஷிப் பில்டர்ஸ் லிமிடெட் நிறுவனமானது மற்றொரு கப்பல் கட்டும் தளத்திற்கு 15,000 கோடி ரூபாய் முதலீடு செய்யும்.
- கப்பல் கட்டும் தளங்கள் ஆனது கடல்சார் துறையை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் தேசிய உத்தியுடன் இணைந்து, கப்பல் கட்டுதல் மற்றும் பழுது பார்ப்பதில் கவனம் செலுத்தும்.

# தேசியச் செய்திகள்

## அடுத்த தலைமுறை GST சீர்திருத்தங்கள்





- அடுத்த தலைமுறை சரக்கு மற்றும் சேவை வரி (GST) சீர்திருத்தங்கள் நவராத்திரியின் முதல் நாளில் தொடங்கும் என்று பிரதமர் அறிவித்தார்.
- சீர்திருத்தங்களுடன் தொடங்கும் GST பச்சத் உத்சவ் ஆனது, குடிமக்கள் பல துறைகளில் குறைந்த விலையில் பொருட்களை வாங்க உதவும்.
- திருத்தப்பட்ட GST அமைப்பு நகர சுங்க வரி/ஆக்ட்ரோய், நுழைவு வரி, கலால் வரி, மதிப்புக் கூட்டு வரி, விற்பனை வரி மற்றும் சேவை வரி போன்ற பல பழைய வரிகளை மாற்றியமைத்து 5 சதவீதம் மற்றும் 18 சதவீதம் என்ற இரண்டு முக்கிய வரி அடுக்குகளை மட்டுமே தக்க வைத்துக் கொள்வதன் மூலம் வரிக் கட்டமைப்பை எளிதாக்குகிறது.
- உணவுப் பொருட்கள், மருந்துகள், சோப்பு, பல் துலக்குதல், பற்பசை, சுகாதாரக் காப்பீடு மற்றும் ஆயுள் காப்பீடு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீது தற்போது வரி விதிக்கப்படாது அல்லது 5 சதவீத வரி விதிக்கப்படும்.
- இந்தச் சீர்திருத்தங்கள் முந்தைய வரி முறையில் உள்ள செயல்திறமையின்மையை

நீக்குதல், காகித/அறிக்கையிடல் வேலைபாடுகளைக் குறைத்தல் மற்றும் வர்த்தகத்திற்கான மாநிலங்களுக்கு இடையேயான தடைகளை நீக்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன.

## இந்தியாவின் மின்சார துறை உமிழ்வுகள்

- 2024 ஆம் ஆண்டின் இதே காலக் கட்டத்துடன் ஒப்பிடும்போது 2025 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இந்தியாவின் மின்சாரத் துறை உமிழ்வு 1% குறைந்துள்ளது.
- கோவிட்-19 பெருந்தொற்று காலத்திற்குப் பிறகு, இந்தியாவில் உள்ள எந்தவொரு துறையிலும் அரை ஆண்டு கால உமிழ்வு வீழ்ச்சி பதிவாவது இதுவே முதல் முறை ஆகும்.
- லேசான கோடை கால வெப்பநிலை மற்றும் வலுவான மழைப்பொழிவு காரணமாக நிலவிய குறைந்த மின் தேவை இந்த சரிவுக்குப் பங்களித்தது.
- புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மின்சாரம் ஆனது, ஒரு மணிநேரத்திற்கு 29 டெராவாட் குறைந்துள்ளது, அதே நேரத்தில் சூரிய, காற்று, நீர் மற்றும் அணுசக்தி உற்பத்தி அதிகரித்துள்ளது.
- இந்தியாவில் 25.1 ஜிகாவாட் அளவிலான தூய்மையான எரிசக்தி திறன் புதிதாக உருவாக்கப் பட்டுள்ளது என்பதோடு இது கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் பதிவானதை விட 70% அதிகமாகும்.
- தொடர்ச்சியான தூய்மையான எரிசக்தி விரிவாக்கம் காரணமாக இந்தியாவின் மின்சாரத் துறையிலிருந்து உமிழ்வு 2030 ஆம் ஆண்டிற்குள் உச்சத்தை எட்டும் என்று நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.




## 'Blue Ports' திட்டம்

- இந்தியா மற்றும் உணவு மற்றும் வேளாண் அமைப்பும் (FAO) புதிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் கீழ் Blue Ports/கடல்சார் துறைமுக உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதற்காக ஒரு திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- கடல்சார் துறைமுகங்கள் ஏற்றுமதியை அதிகரிப்பது, மீனவர்களின் வாழ்வாதாரத்தை ஆதரிப்பது மற்றும் துறைமுக நடவடிக்கைகளின் சுற்றுச்சூழல் பாதிப்புத் தடத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.
- நிலையான மற்றும் திறன் மிக்க மீன்பிடித் துறைமுகங்களை மையமாகக் கொண்ட திறன் மேம்பாட்டுக் கருத்தரங்கத் தொடரில் முதல் தொடரினை மீன்வளத் துறை நடத்தியது.

- இந்த முன்னெடுப்பில் வனக்பரா (டையு), ஜகாவ் (குஜராத்) மற்றும் காரைக்கால் (புதுச்சேரி) ஆகிய இடங்களில் மூன்று சோதனை துறைமுகங்கள் உள்ளன.
- துறைமுக செயல்திறன் மற்றும் நிலைத் தன்மையை மேம்படுத்துவதற்காக செயற்கை நுண்ணறிவு, 5G, IoT (இணைய உலகம்) மற்றும் தானியக்கம் போன்ற திறன் மிக்க தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படும்.




## சர்வதேசச் செய்திகள்

### சவுதி -பாகிஸ்தான் பாதுகாப்பு ஒப்பந்தம்





- சவுதி அரேபியாவும் பாகிஸ்தானும் ஒரு நாட்டிற்கு எதிரான எந்தவொரு ஆக்கிரமிப்பும் இரு நாடுகளுக்கும் எதிரான ஆக்கிரமிப்பாக கருதப் படும் என்று அறிவிக்கின்ற ஒரு பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

- இந்த ஒப்பந்தமானது, பாகிஸ்தான் அரசானது சவுதி நாட்டின் படைகளுக்கு வரலாற்று ரீதியாகப் பயிற்சி அளிப்பதோடு சவுதி அரேபியாவானது பாகிஸ்தானின் அணுசக்தித் திட்டம் உட்பட அந்நாட்டிற்கான நிதி ஆதரவை வழங்குவதுடன் இரு நாடுகளின் நீண்ட கால இராணுவ உறவுகளை முறைப்படுத்துகிறது.
- சவுதி அரேபியாவின் இந்த நடவடிக்கையானது, குறிப்பாக 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் காசா மோதலுக்குப் பிறகு இஸ்ரேலுடனான இயல்பாக்கம் தடை பட்டுள்ள நிலையில், அதன் கூட்டணிகளின் பன்முகத் தன்மையைக் குறிக்கிறது.
- பாகிஸ்தான், இந்த வளைகுடா நாட்டிலிருந்து நிதி ஆதரவைப் பெறும் அதே வேளையில், பிராந்தியப் பாதுகாப்பு வழங்குநராக தனது பங்கை வலுப்படுத்த முயல்கிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## இயந்திர மனிதன்-வியாமித்ரா




- இஸ்ரோ நிறுவனமானது, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பணியாளர்கள் இல்லாத அதன் முதல் ககன்யான் ஆய்வுத் திட்டத்தில் செயற்கை நுண்ணறிவில் இயங்கும் பகுதியளவு மனித உருவிலான வியாமித்ரா எனும் இயந்திர மனிதனை விண்ணில் ஏவ உள்ளது.
- வியோமித்ரா (விண்வெளி என பொருள்படும் வியோமா மற்றும் நண்பர் என பொருள்படும் மித்ரா என்ற சொற்கள்) விண்வெளி வீரர்கள் விண்வெளிக்கு அனுப்பப் படுவதற்கு முன்பு மனிதச் செயல்பாடுகளை உருவகப்படுத்தவும், உள் அமைப்புகளை மதிப்பிடவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- அலுமினியக் கலவையால் கட்டமைக்கப்பட்ட இது, வெப்பநிலை, அழுத்தம், $CO_2$

அளவைக் கண்காணிக்கிறது மற்றும் இந்தி மற்றும் ஆங்கில மொழிகளில் உயிர் வாழ்வதற்கான ஆதரவு அமைப்புகளுடன் தொடர்பு கொள்கிறது.

- எச்சரிக்கைகளை வெளியிடக் கூடிய இது ஆறு குழுச் செயல்பாடுகளை மேற் கொள்ளும் என்பதோடு மனித சைகைகளைப் பிரதிபலிக்கும் மற்றும் நுண் ஈர்ப்பு விசை போன்ற விண்வெளி நிலைமைகளை மதிப்பிடலாம்.
- நாசாவின் ரோபோநாட் மற்றும் சீனாவின் சியாவோ ஹேங்கைப் போலல்லாமல், வியாமித்ரா விமானத்தில் உதவியாளராக இருப்பதற்குப் பதிலாக பறத்தலுக்கு முந்தைய பாதுகாப்பு சரிபார்ப்பாளராகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கருஞ்சிவப்பு நிறத் தட்டான் பூச்சி




- கேரளாவின் மூணாரின் உயரமான பள்ளத்தாக்குகளில் ஓர் அரிய கருஞ்சிவப்பு நிறத் தட்டான் பூச்சி/தும்பி காணப்பட்டது.
- குரோகோதெமிஸ் எரித்ரேயா இனம் ஆனது, கருஞ்சிவப்பு தும்பி அல்லது அகன்ற கருஞ்சிவப்பு என்றும் அழைக்கப்படுகிறது.
- இது பொதுவாக வெப்பமான தாழ்நிலப் பகுதிகளிலும், குளிர்ந்த மலைப் பகுதிகளில் அரிதாகவே காணப்படுகிறது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்


## உலக வர்த்தக அறிக்கை 2025

- உலக வர்த்தக அமைப்பானது, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 ஆம் தேதியன்று WTO

பொது மன்றத்தில் 2025 ஆம் ஆண்டு உலக வர்த்தக அறிக்கையை வெளியிட்டது.

- செயற்கை நுண்ணறிவு ஆனது 2040 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய வர்த்தகத்தினை 34% முதல் 37% வரை அதிகரிக்கக் கூடும் என்று அறிக்கை கணித்துள்ளது.
- பல்வேறு கொள்கை மற்றும் தொழில்நுட்ப சூழ்நிலைகளின் கீழ் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 12% முதல் 13% வரை உயரக்கூடும்.
- செயற்கை நுண்ணறிவினால் செயல்படுத்தும் பொருட்களில் உலகளாவிய வர்த்தகம் 2023 ஆம் ஆண்டில் 2.3 டிரில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டது.
- குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் அதிக வருமானம் கொண்ட நாடுகளுடனான டிஜிட்டல் இடைவெளியை 50% குறைத்தால், வருமானம் ஆனது முறையே 15% மற்றும் 14% உயரக்கூடும்.
- 2012 ஆம் ஆண்டில் 130 ஆக இருந்த செயற்கை நுண்ணறிவு தொடர்பான பொருட்களுக்கான அளவு கட்டுப்பாடுகளின் எண்ணிக்கை 2024 ஆம் ஆண்டில் கிட்டத் தட்ட 500 ஆக உயர்ந்தது.
- உயர் மற்றும் உயர்-நடுத்தர வருமானம் கொண்ட நாடுகளில்தான் இந்தக் கட்டுப்பாடுகள் பெரும்பான்மையாக விதிக்கப் பட்டுள்ளன.
- சில குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் இன்னும் செயற்கை நுண்ணறிவு தொடர்பான பொருட்களுக்கு 45% வரை பிணை சார் வரிகளை எதிர்கொள்கின்றன.
- உலக வர்த்தக அமைப்பில் 80 செயற்கை நுண்ணறிவு தொடர்பான வர்த்தகக் கவலைகள் எழுப்பப்பட்டுள்ளன.
- இந்த அறிக்கையானது தகவல் தொழில்நுட்ப ஒப்பந்தத்தில் பரந்த அளவிலான பங்களிப்பை ஊக்குவிக்கிறது மற்றும் சேவைகளில் வர்த்தகம் குறித்த பொது ஒப்பந்தத்தின் கீழ் புதுப்பிக்கப்பட்ட உறுதிமொழிகளை ஊக்குவிக்கிறது.

Figure B.4: High-income economies are projected to see the largest increase in exports (2025-40)




# முக்கிய தினங்கள்

## தெற்கு நாடுகளுக்கான சர்வதேச அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க தினம் - செப்டம்பர் 16

- 2023 ஆம் ஆண்டு ஹவானாவில் நடைபெற்ற அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்கள் குறித்த உச்சி மாநாட்டின் போது, G77 நாடுகளின் தலைவர்கள் மற்றும்

சீனத் தலைவர்கள் இந்த நாளை நியமிக்க ஒப்புக் கொண்டனர்.

❖ 2024 ஆம் ஆண்டு ஜனவரி 09 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை இந்த நாளை அறிவித்தது.

❖ இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கும், உள்ளடக்கிய வளர்ச்சிக்கான உலகளாவிய உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதற்கும் இந்த நாள் ஒரு முக்கியமானப் படி நிலையாக அனுசரிக்கப்படுகிறது.




## உலக நோயாளிகள் பாதுகாப்பு தினம் 2025 - செப்டம்பர் 17




❖ நோயாளிகளின் தீங்கைக் குறைப்பது குறித்த தகவலையும் வழிகாட்டுதலையும் வழங்குவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

❖ இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Safe care for every newborn and every child", with the slogan "Patient safety from the start!" என்பதாகும்.

❖ உலக சுகாதார சபையின் தீர்மானம் 72.6 - "நோயாளிப் பாதுகாப்பு குறித்த உலகளாவிய நடவடிக்கை" மற்றும் உலகளாவிய நோயாளிப் பாதுகாப்பு செயல் திட்டம் 2021-2030 ஆகியவற்றினை முன் வைத்தது.

## உலக மூங்கில் தினம் 2025 - செப்டம்பர் 18

❖ இது பாங்காக்கில் (2009) நடைபெற்ற 8வது உலக மூங்கில் மாநாட்டின் போது உலக

மூங்கில் அமைப்பினால் நிறுவப்பட்டது.

- அறிவியல் ரீதியாக மூங்கில் ஒரு மரம் அல்ல, ஒரு புல் ஆகும் , ஆனால் இந்திய வனச் சட்டம், 1927 ஆனது இதனை ஒரு மரமாகக் கருதியது.
- 2017 ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்தின் மூலம் மூங்கில் மர வகையிலிருந்து நீக்கப்பட்டு உள்ளது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, 'Next Generation Bamboo: Solution, Innovation, and Design' என்பதாகும்.




# இதரச் செய்திகள்

## 1965 ஆம் ஆண்டு போர் வெற்றியின் 60 ஆம் ஆண்டு நிறைவு




- 1965 ஆம் ஆண்டில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்தியாவின் வெற்றியின் வைர விழாவை இந்தியா கொண்டாடுகிறது.
- 1965 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 05 ஆம் தேதியன்று, பாகிஸ்தான் படைவீரர்கள் காஷ்மீர் உள்ளூர்வாசிகளாக வேடமணிந்து மெய் கட்டுப்பாட்டுப் பகுதியைக் (LOC) கடந்தனர்.
- இந்த ஊடுருவல் உத்திக்கு ஜிப்ரால்டர் நடவடிக்கை என்ற குறியீட்டுப் பெயர் சூட்டப்

பட்டது.

- இந்திய இராணுவமானது அதற்குப் பதிலடி கொடுத்து பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் (PoK) உள்ள ஹாஜி பிர் கணவாயைக் கைப்பற்றியது.
- செப்டம்பர் 01 ஆம் தேதியன்று, ஜம்முவில் உள்ள அக்னூர் நகரத்தைக் கைப்பற்றும் நோக்கில் பாகிஸ்தான் தனது கிராண்ட்ஸ்லாம் நடவடிக்கையை மேற்கொண்டது.
- இராஜஸ்தான் உட்பட பல முனைகளில் இந்தப் போர் நடந்தது.
- ஐ.நா. பாதுகாப்பு சபை இரு நாடுகளிடமிருந்தும் நிபந்தனையற்ற போர்நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்ததை அடுத்து, அந்தப் போர் 1965 ஆம் ஆண்டு செப்டம்பர் 23 ஆம் தேதியன்று முடிவுக்கு வந்தது.
- 1966 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தாஷ்கண்டில் (தற்போது உஸ்பெகிஸ்தானில் உள்ளது) சோவியத் ஒன்றியத்தால் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் நடத்தப் பட்டன என்பதோடு இது தாஷ்கண்ட் ஒப்பந்தத்திற்கு வழிவகுத்தது.
- இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி மற்றும் பாகிஸ்தான் அதிபர் அயூப் கான் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★